[1975 மார்ச் 7

பத்தியை அதிகமாகச் செய்வதற்கு அரசாங்கம் திட்டம் வைத்திருக்கிறதா? அதை உற்பத்தி செய்வதற்கு தடையில்லாமல் இருப்பதற்காவது அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தும் கவனத்தில் கொள்ளப்படும்.

முத்திரைத்தாள்கள் விற்பனை.

*228 வினா—**திரு. ச. சங்குமுத்து தேவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் பொதுமக்களுக்குத் தேவைப்படும் கோர்ட்பீஸ் ஸ்டாம்புகள், காபி ஸ்டாம்புகள், N.J. ஸ்டாம்புகள் முதலியன கிடைப்பதில் உள்ள இடர்பாடுகளை அரசு அறியுமா?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:

(அ) ஆம்.

(இ) 1974-ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்திலேயே முத்திரைத் தாள்களின் தேவைப்பட்டியல்கள் நாசிக்கிலுள்ள முத்திரைத்தாள் துணைக் கட்டுப்பாட்டு அதிகாரிக்கு அனுப்பப்பட்டிருந்தும், அவர் அத்தேவைப்பட்டியலில் கண்டவாறு உடனடியாக முத்திரைத் தாள்களை அனுப்பி வைக்கவில்லை; திருநெல்வேலி மாவட்டத்தில் முத்திரைத்தாள்கள் பற்றாக்குறை ஏற்பட்டதற்கு இதுவே முக்கிய காரணமாகும். இருப்பினும் பொது மக்களின் நலனைக் காக்கும் பொருட்டு ஏனைய மாவட்டங்களிலிருந்து திருநெல்வேலி மாவட்டத்திற்கு முத்திரைத் தாள்களை அனுப்பி வைக்க துறைக்குள்ளாக சில ஏற்பாடுகள் உடனடியாகச் செய்யப்பட்டன. இவ்வாறு உரிய காலத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கை ஓரளவிற்கு முத்திரைத்தாள் பற்றாக்குறையைத் தவிர்த்தது. நாசிக்கிலிருந்து முத்திரைத்தாள்கள் வழங்கப்படுவது தற்போது தொடங்கிவிட்டது. தற்போது பல்வேறு மதிப்புகளில் முத்திரைத்தாள்கள் மொத்தம் ரூபாய் 12.2 லட்சம் மதிப்பிற்கு திருநெல்வேலி மாவட்டக் கருவூலத்திற்கு வந்துள்ளன. அவை அம்மாவட்டத்திலுள்ள துணைக்கருவூலங்கள்

1975 மார்ச் 7]

அனைத்திற்கும் வழங்கப்பட்டு வருகின்றன. திருநெல்வேலி மாவட்டத்தில் முத்திரைத்தாள்களின் இருப்பு நிலை தற்போது சீரடைந்துள்ளது. அம்மாவட்டத்தில் முத்திரைத்தாள்கள் கிடைக்கவில்லை என்ற புகார் எதுவும் இப்போது வரவில்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, இப்போது மேம்பாடு இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் காப்பியிங் ஷீட்ஸ் கிடைக்கவில்லை என்று சொல்லப்படுகிறதே, அதைப்பற்றி அரசாங்கம் நடவடிக்கை எடுத்து இருக்கிறதா? அந்த மாவட்டத்திலே மட்டுமல்லாமல் மற்ற மாவட்டங்களிலேயும் இப்படிப்பட்ட குறைபாடுகள் இருந்துகொண்டிருக்கின்றன. அவற்றை நிவர்த்திப்பதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : நான்-ஜுடிஷியல் ஸ்டாம்ப் பேப்பர்களைப்பற்றிச் சொல்கிறார்கள் என்று நினைக்கிறேன். அதுவும் அங்கங்கே அனுப்பப்பட்டு வருகிறது. ரூபாய் 5,05,633.65 மதிப்பு அளவிற்கு அனுப்பப்படுகிறது.

திரு. நா. வெ. குருசாமி : இந்த முத்திரைத் தாள்கள் பற்றாக்குறை இருப்பதால் அதிக விலை கொடுத்து வாங்கக்கூடிய நிலைமை இருக்கிறது. அரசு அதன்மீது நடவடிக்கை எடுக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஏ. ஆர். சுப்பையா : இந்த முத்திரைத்தாள்கள் பற்றாக்குறை, தட்டுப்பாடு வந்திருக்கும்போது ரிஜிஸ்தார் ஆபீஸ்களிலே அத்தாட்சிபெற்று ரொக்கம் கொடுத்து பெற்றுக்கொள்ளலாம் என்ற முறை இருந்தது. அந்த முறையைப் பின்பற்ற அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : அது பரிசிலிக்கப்படுகிறது. இப்போது பற்றாக்குறை காரணத்தால் மட்டுமல்ல, மற்றபடி அதுவும் ஏற்றுக்கொள்ளப்படும்.

திரு. எம். சுரேந்திரன் : முத்திரைத்தாள்கள் பற்றாக்குறை இருக்கிறபோதும் சரி, தாராளமாகக் கிடைக்கிறபோதும் சரி, சில இடங்களிலே விலை அதிகமாக விற்கப்படுகிறது. சில்லறைக் கடைக்காரர்கள், ஸ்டாம்ப் வெண்டர்களிடத்திலிருந்து வாங்கி அதிக விலைக்கு விற்கிறார்கள். அது சர்வசாதாரணமாக இருக்கிறது. அதற்குக் காரணம் முத்திரைத்தாள்கள் கிடைக்காத

நிலைமை இருப்பதுதான். ஆகவே, அதிகமான விலையில்லாமல் பரவலாக எல்லா இடங்களிலும் இந்த முத்திரைத்தாள்கள் கிடைக்கக் கூடிய வழியை அரசாங்கம் செய்யுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: எந்த எந்த இடங்களில் போதுமான வெண்டர்கள் இல்லாததால் கிடைக்கவில்லையோ அப்படிப்பட்ட இடங்களுக்கு அதிகமானவர்களை நியமனம் செய்கிறோம். ஆகவே கிடைக்கவில்லை என்ற குறை தவிர்க்கப் படுகிறது. கடைகளிலே வாங்கக்கூடாது. ஒருக்கால் நில உச்ச வரம்புச் சட்டத்தின்போது வாங்கிவைத்ததாக இருக்கலாம், ஆனால் அவைகூட விலை போகவில்லை என்று தெரிகிறது.

திரு. எம். முத்தையா: நெல்லை மாவட்டத்தில் முத்திரைத் தாள்கள் கிடைப்பது அரிதாக இருக்கிறது. ஆனால் சிவகாசியிலே தாராளமாகக் கிடைக்கிறது. அதிகவிலை கொடுத்து வாங்க வேண்டியிருக்கிறது. அதைத் தடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: அரசாங்கத்திற்கு நாசிக் அச்சகத்திலிருந்து அச்சடிக்கப்பட்டு வருவதுதான். எல்லா மாவட்டங்களுக்கும் அது பரவலாகப் பகிர்ந்தளிக்கப்படுகிறது. ஆகவே, சிவகாசியிலே அதிகமான விலைக்கு விற்கப்படுவதாகச் சொல்லப்படுவது ஆச்சரியமாக இருக்கிறது. அரசாங்கத்தின் கவனத்திற்கு அதைக் கொண்டுவந்தால் நடவடிக்கை எடுக்கப் படும்.

திரு. செ. அரங்கநாயகம்: முத்திரைத் தாள்கள் வாங்கி விற்கப்படுவதை முறைப்படுத்த வேண்டும் என்று ஸ்டாம்ப் வெண்டர்கள் ஏதாவது கோரிக்கை மனு கொடுத்திருக்கிறார்களா? அரசு அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: அதுபற்றி என்னிடத்தில் குறிப்பு இல்லை. அதைப்பற்றி அறிந்து தேவைப்படும்போது சொல்கிறேன்.

திரு. கு. காமாட்சி: முத்திரைத்தாள்கள், ஸ்டாம்புகள் எல்லாம் கள்ள நோட்டு அச்சடிப்பதைப்போல் சில இடங்களில் கள்ளத்தன மாக அச்சடிக்கப்படுவதாக ஏதாவது தகவல் வந்திருக்கிறதா? அதன்மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

1975 மார்ச் 7]

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : அப்படியொன்றும் இல்லை.

திரு. கே. எ. வகாப் : முத்திரைத்தாள்கள் கிடைப்பதில் உள்ள சிரமங்களைப் போக்குவதற்கு சப்-ரிஜிஸ்தார் ஆபீஸ்களிலேயே அரசாங்கமே வைத்து விற்கக்கூடிய ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இப்போது எல்லா இடங்களிலும் சப்-ரிஜிஸ்தார் ஆபீஸ்கள் இல்லை. இருக்கிற இடங்களில் கவனிக்கப்படலாம். எல்லா இடங்களிலும் அப்படிக் கொடுப்பது என்பது கஷ்டமானதாகும்.

திரு. பூ. எட்டியப்பன் : தலைவர் அவர்களே, முத்திரைத்தாள்கள் கள்ளமார்க்கட்டிலே விற்கப்படுகிறது என்று சொல்கிறார்கள். அதற்கு மூல காரணம் அந்த ஸ்டாம்ப்களை 2, 3 மாதங்களுக்கு முன்னாலேயே வாங்கி வைத்து பிற்காலத்தில் விற்கப்படுகிறது, அப்படி விற்கப்படுகிறபோது பெயர் எழுதாமல் வைத்துக்கொள்கிறார்கள். பிறகு கொடுக்கிறார்கள். இதனால் 5 ரூபாய்க்கு விற்க வேண்டிய ஸ்டாம்ப் பேப்பர் 10, 15 ரூபாய் என்று விற்கப்படுகிறது. இந்த ஸ்டாம்ப் பேப்பர்கள் சரியான முறையில் விற்கப்படுகிறதா என்று அதிகாரிகள் அடிக்கடி கண்காணித்து 2, 3 மாதங்களுக்குப் பிறகு வேறு ஒரு பெயருக்கு எழுதுவது கூடாது என்று தடை செய்ய அரசு உத்தரவிடுமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இப்போதே நல்ல முறையிலே கண்காணிக்கப்பட்டு வருகிறது. இப்படிப்பட்ட புகார்கள் தெரிவிக்கப்பட்டால் நடவடிக்கை எடுக்கப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

தீ விபத்தில் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணம்

* 229 **வினா—டாக்டர் எச். வி. ஹாண்டே :** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, தியாகராயநகரில் 12—11—1974 அன்று ஏற்பட்ட தீ விபத்தால் சேதமடைந்த பொருட்களின் மதிப்பு, உயிரிழந்தோர் எண்ணிக்கை ஆகியவைகள் எவ்வளவு ?

(இ) இதனால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணப் பணி மேற்கொள்ளப்பட்டதா ?